**அடிப்படைச் சமூக சேவைகளை இலக்கிட்டு அவசர பிராந்தியங்களை முன்னேற்றுகின்ற செயற்திட்டம் - 2016**

---

அடிப்படைச் சமூக சேவைகளை இலக்கிட்டு அவசர பிராந்தியங்களை முன்னேற்றுகின்ற செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜிஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவருக்கும் (ஜேஐசீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 மார்ச் 28 ஆம் திகதிய எஸ்எல்பி–105 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4(6) ஆம் பிரிவின் III ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நிதி அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களமாகவிருந்த தற்போதைய அபிவிருத்தி கடமைப்பொறுப்புக்கள் அமைச்சின் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு மற்றும் கிழக்கு, வடமேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகள் என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சுகாதார, மருத்துவ முறைமையை முன்னேற்றுதல் மற்றும் இரண்டாம் தர வைத்தியசாலைகள் மற்றும் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் என்பவற்றிலுள்ள வசதிகள் மற்றும் உபகரணங்களை முன்னேற்றுவதினூடாக அத்தியாவசிய மருந்துகளின் உற்பத்தி இயலளவை பலப்படுத்தி அவற்றின் மூலம் தொற்றாத நோய்களின் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கு பங்களித்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,332 மில்லியனிற்குச் சமனான ஜப்பான் யென் 4,760 மில்லியனானதுடன், அதில் ரூபா 5,155 மில்லியனிற்குச் சமனான ஜப்பான் யென் 3,935 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூலை 23 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய

உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்பதிகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

ரூபா 16.12 மில்லியன் கூட்டுத்தொகையான ஆலோசனைக் கொடுப்பனவுகள் அவற்றின் மீதான நாணயத் தளம்பல்களிற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாததால் ரூபா 757,058 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2016 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஜசீஏ | 3,935 | 5,155 | 839 | 791 | 997 | 2,454 | 3,014 |
| இலங்கை அரசாங்கம் | 825 | 1,177 | 521 | 350 | 451 | 603 | 822 |
| **மொத்தம்** | **4,760** | **6,332** | **1,360** | **1,141** | **1,448** | **3,057** | **3,836** |

## 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், வறக்காபொல, கல்கமுவ, தெல்டெனிய மற்றும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைகளின் இயலளவுகளை முன்னேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வறக்காபொல, கல்கமுவ மற்றும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைகளின் சிவில் நிர்மாண வேலைகள் 2016 நவம்பர் 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2016 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டு மாகாண சுகாதார அதிகாரிகளிற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014 பெப்ரவரி 12 இல் ஆரம்பிக்கப்பட்ட தெல்டெனிய ஆதார வைத்தியசாலையின் புதிய சத்திரசிகிச்சைக் கூடத் தொகுதி மற்றும் நீதி மருத்துவப் பிரிவு என்பவற்றின் நிர்மாண வேலைகள் வடிவமைப்புத் தவறுகள் மற்றும் ஏனைய நிர்வாக குறைபாடுகள் காரணமாக 2016 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வசதிகள் மற்றும் உபகரணங்களை முன்னேற்றுவதன் ஊடாக அத்தியாவசியமான மருந்துகளின் உற்பத்தி இயலளவை பலப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஆகையால், கட்டிட களஞ்சிய அபிவிருத்தி மற்றும் இயந்திரங்கள் போன்றவற்றை நவீனமயப்படுத்தி உற்பத்தி இயலளவை முன்னேற்றுதல் தொடர்பான வேலைகள் ரூபா 1,630 மில்லியனிற்குச் சமமான ஜப்பானிய யென் 1,244 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்பான அறிக்கைகளின் பிரகாரம், கட்டிட நிர்மாணம் மற்றும் இயந்திரங்களின் கொள்வனவு மீதான ஒப்பந்தங்கள் 2017 சனவரி 11 இலேயே வழங்கப்பட்டிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெல்டெனிய ஆதார வைத்தியசாலையின் நிர்மாண வேலைகள் நிர்மாண வேலைகளின் ஆரம்பக் கட்டங்களில் வேலையிலீடுபடுத்தப்பட்ட மதியுரையாளரின் தவறுகள் காரணமாக மெதுவானதாக காணப்பட்டது. ஆகையால், ஏனைய மதியுரையாளரின் சேவைகள் 2016 செப்தெம்பர் 23 இலிருந்து பெறப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ரூபா 1.60 மில்லியன் மேலதிகக் கிரயம் செலவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) நிர்மாணக் காலப்பகுதியினுள் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த தெல்டெனிய ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடம் மற்றும் அவசர மருத்துவ சிகிச்சைப் பிரிவு என்பவற்றிற்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் மின்சார மற்றும் இயந்திரவியல் முறைமையை நிறுவுதல் ரூபா 147.03 மில்லியன் கிரயத்தில் 2016 பெப்ரவரியில் தனியொரு ஒப்பந்தமாக திட்டமிடப்பட்டு வழங்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய வேலைகள் 2016 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தெல்டெனிய ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கான கட்டிட நிர்மாணத்திற்காக ஏற்பட்ட ரூபா 17.29 மில்லியன் கூட்டுத்தொகையான பிரயாணிகள் மின் உயர்த்தி மற்றும் ஏனைய வேலைகள் மீதான கிரயங்கள் 2014 பெப்ரவரி 11 இல் சமர்ப்பிக்கப்பட்ட அளவீட்டுத் தாள்களில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் 2016 பெப்ரவரி 25 இல் மேலதிக வேலைகளாக உள்ளடக்கப்பட்டு கோரப்பட்டிருந்தன.

**3.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

---

தெல்டெனிய ஆதார வைத்தியசாலையின் நிர்மாணங்களிற்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுவில் கூறப்பட்ட விலை வீதங்கள் 32 சதவீதம் தொடக்கம் 568 சதவீதம் வரையான வீச்சில் பொறியியலாளரின் மதிப்பீட்டை விட உயர்வாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால், பொறியிலாளரின் மதிப்பீடு யதார்த்தமானதாக மேற்கொள்ளப்பட்டிருக்காததை இது சுட்டிக்காட்டுகின்றது.